DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: S.T.C. No. 358/2024 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.மோகன்தாஸ் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.நாகு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 25.10.2025

---

**குறுக்கு விசாரணை**

1. என் மீது ரூபாய் 300 கோடிக்கு மேல்நிதி மோசடிசெய்ததற்காக Economic offences துறையில் வழக்கு நிலுவையில் உள்ளதாஎன்றால் என்மீதும்உள்ளது என்னுடன் சேர்ந்து சுமார் 67 நபர்கள் மீது வழக்கு நிலுவையில் உள்ளது. நான் இந்நீதிமன்றத்தில தாக்கல் செய்துள்ள புகாரின் விவரங்கள்அனைத்தும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள புகாரில் நானும் எதிரி ஸ்ரீவித்யா வும் நெருங்கிய நண்பர்கள் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எத்தனை வருட

காலமாக நாங்கள் நண்பர்களாக பழகி வருகிறோம் என்றால் கல்லூரி பருவம்முதல் பழகி வருகிறோம். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் தற்சமயம் விவசாயம் செய்து வருகிறேன். நான் ஏதாவது நிறுவனத்திற்கு இயக்குநராக இருந்தேனா என்றால் இருந்தேன் ஆனால் அதை இயக்குநர் பதவி என்று சொல்லமுடியாது. மாத சம்பளத்திற்காக வேலை பார்த்தேன்.

2. நான் தாக்கல்செய்துள்ள புகார் மனு பத்தி 3ல் 5ம் வரியில் எதிரிக்கு பணம்கொடுத்த சமயத்தில் No spare cash in his hand என தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் இடம்பெற்றுள்ள தகவல்கள் அனைத்தும் சரிதான் என்றும் அந்த தகவல்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் சரிதான் தெரியும். நான் எதிரிக்கு அனுப்பிய ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் பத்தி 2ல் எதிரி நகைளை திரும்ப தருவார் என 3 மாதங்கள் காத்திருந்து திரும்ப தராமலும் நான் எதிரிக்கு கொடுத்த 27.5 சவரன் தங்க நகைகளை 17.5 சவரன் தங்க நகைகளை எதிரி விற்றுவிட்டதாகவும் மீதமுள்ள நகைகளை தனியார் நிநி நிறுவனத்தில் அடகு வைத்துவிட்டதாக எதிரி என்னிடம் தெரிவித்ததாக நான் அறிவிப்பில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

3.நான் 3 மாத காலம் காத்திருந்த பிறகு தான் நகைகளை திரும்ப கேட்டேன் என்றால் சரிதான். எந்த தேதியில் எதிரியிடம் நகைகளை கொடுத்தேன் என்றால் 2023 ஆண்டு ஜீன் மாதம் 7 அல்லது 8 ம் தேதியில் கொடுத்திருப்பேன்.நான் தாக்கல்செய்துள்ள புகார் மனுவில் பத்தி 3ல் எதிரிக்கு 2023 ஆண்டு ஜீன் மாதத்தில் நகைகளை கொடுத்தேன் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 2023 ஆண்டு ஜீன்மாதம்7 அல்லது 8ம் தேதியளவில் நகைகளை கொடுத்தேன் அதற்கு ஜீன்மாதம் 12ம்தேதியில் எதிரி பத்திரம் எழுதி தந்தார். நான் ஜீன்மாதம்7 அல்லது 8ம்தேதியில் நகைகளை கொடுத்துவிட்டு அதை 3 மாதங்கள் சென்று திரும்ப கேட்டதாக தெரிவித்துள்ளேன். எதற்காக நகை கொடுத்து 5 நாட்களில் பத்திரம் எழுதி வாங்கினேன் என்றால் நான் எதிரியிடம் நகைகளை கொடுக்கும்போதே நகைகளை அடகு வைத்துவிட்டு அதன் ரசீதை என்னிடம் தரவேண்டும் என்று தெரிவித்திருந்தேன்.மேற்படி ரசீதை நான் எதிரியிடம் கேட்டபோது அவர் முன்னுக்கு பின் முரணான பதிலை என்னிடம்கூறினார்.

அதன்பின் தான் எதிரி 17.5 சவரன் நகைகளை விற்றுவிட்டதாகவும் மீதமுள்ள 10 பவுன் நகைகளை அடகு வைத்துள்ளதாகவும் என்னிடம் தெரிவித்தார்.

4.நான் எதிரிக்கு அனுப்பிய ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் பத்தி 2ல் எதிரி நகைளை திரும்ப தருவார் என 3 மாதங்கள் காத்திருந்து திரும்ப தராமலும் நான் எதிரிக்கு கொடுத்த 27.5 சவரன் தங்க நகைகளை 17.5 சவரன் தங்க நகைகளை எதிரி விற்றுவிட்டதாகவும் மீதமுள்ள நகைகளை தனியார் நிநி நிறுவனத்தில் அடகு வைத்துவிட்டதாக எதிரி என்னிடம் தெரிவித்ததாக நான் அறிவிப்பில் தெரிவித்துள்ளேன் மேற்படி தகவல் சரியா தவறா என்றால் என்றால் சரிதான். நான் எதிரிக்கு அனுப்பிய ம.சா.ஆ.,4 வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியுடன் செய்துகொண்ட உறுதிமொழி பத்திரமான ம.சா.ஆ.1 யை குறித்து தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன்.நான் எதிரிக்கு அனுப்பிய ம.சா.,ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் ம.சா.ஆ.1 ஆவணத்தைகுறித்து தெரிவிக்கவில்லை என்றும் ம.சா.ஆ.1 ஆவணமானது அறிவிப்பு தேதி வரை இயற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

5.நான் எதிரிக்கு அனுப்பிய ம.சா.,ஆ.4 வழக்கறிஞர்அறிவிப்பில் நான் எதிரியிடம் சென்று நகைளை கேட்டபோது அவர் விரைவில் நகைகளை திரும்ப தருவதாக என்னிடம் தெிவித்தார் என தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி எ்ன்னிடம் எந்த தேதியில் காசோலை கொடுத்தார் என்றால் 2023 ஆண்டு 9 வது மாதம் எனது ஊருக்கு வந்து கொடுத்தார்.தேதி நினைவில் இல்லை. எதிரி என்னிடம் கொடுத்த காசோலையில் இடம்பெற்றுள்ள அனைத்து குறிப்புகளையும் அவரே தான் எழுதி கொடுத்தாரா என்றால் ஆம் அவரே தான் எழுதி கொடுத்தார். நான் எதிரியை பயமுறுத்தி வற்புறுத்தி அவரிடமிருந்து ம.சா.ஆ.2 காசோலையை பெற்றேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 உறுதிமொழி பத்திரத்தை யார் தயார் செய்தார் என்றால் எதிரிதான் தயார் செய்து கொண்டு வந்தார். மேற்படி ம.சா.ஆ.1 ஆவணத்தை எதிரி தயார் செய்து எங்கு எப்போது கொண்டு வந்தார் என்றால் 13.06.2023 தேதி ஆர்எஸ் மங்கலத்தில் வைத்து கொண்டுவந்தார்.

6. மேற்படி எதிரி ம.சா.ஆ.1 ஆவணத்தை கொண்டு வரும்போது அவருடன் யாராவது வந்தார்களா என்றால் எதிரியின் அப்பாவும் அவரது நண்பர் ஒருவரும் உடன் வந்தார்.ம.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள விவரங்கள்அனைத்தும் சரிதானா என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணத்தில் 27.5 சவரன் நகைகளை திருப்புவதற்கு ரூபாய் 7,58,800/-கொடுக்க எதிரி ஒப்புதல் தெரிவித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் அளித்துள்ள புகார் மனுவில் பத்தி 3 ல் எனது குடும்பத்தினரின் நகை மொத்தம் 27.5 சவரன் நகைகளை எதிரிக்குகொடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் ஆம் தெரிவித்துள்ளேன். எந்த தேதியில் நகைகளை திருப்பினோம் என்றால் ஜீன் 7, அல்லது 8 தேதி 2023 .அதே தேதியில் நான் Muthoot finance ல் எதாவது பரிவர்த்தனை வைத்திருந்தேனா என்றால் இல்லை.நான் அளித்த புகாரில் எதிரி நகைளை எடுத்துகொண்டு ஒரு தனியார் நிதிநிறுவனத்தில் அடகு வைத்ததாக தெரிவித்துள்ளேன் அது எந்த நிறுவனம் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் எனது குடும்பத்தாரின் நகைகளை வைத்தற்கோ திருப்பியதற்கோ ஏதாவது ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி எனக்கு மொத்தமாக எவ்வளவு பணம் மற்றும் நகைளை தரவேண்டும் என்றால் 27 1/2 பவுன் நகைகளை திரும்ப தரவேண்டும்.

7. எதிரி மீது நான் பணத்தை திரும்ப தருவதற்கு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கில் கண்ட நகை பரிவர்த்தனைக்கு முன்னதாக எனக்கும் எதிரிக்கும் பண பரிவர்த்தனை இருந்ததா என்றால் இருந்தது. எவ்வளவு தொகைக்கு பண பரிவர்த்தனைகள் இருந்தது என்றால் அவ்வப்போது 10,000, 20,000 என 50,000 வரை பண பரிவர்த்தனைகள் இருந்தன. நான் வைத்திருந்த Newraice Aalayam Small finance PVT நிறுவனத்தில் எதிரி ஏதேனும் முதலீடு செய்தாரா என்றால் நான் மேற்படி நிறுவனத்தை வைத்திருக்கவில்லை அந்த நிறுவனத்தில் நான் ஒரு ஊழியராக பணியாற்றினேன். எதிரி அந்நிறுவனத்தில் முதலீடுசெய்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் மேற்படி நிறுவனத்தில் ஒரு இயக்குநராக இருந்தேன் என்றும் அந்த நிறுவனத்தில் எதிரி சுமார் ரூ.28,00,000 முதலீடு செய்தார் என்றால் சரியல்ல. சுமார் 60 நபர்களுக்குமேல் அந்நிறுவனத்தில் இயக்குநர்களாக இருந்தார்கள் நான் அதில் சம்பளம் பெறும்ஒரு

இயக்குநராக இருந்தேன்.எதிரி முதலீடுசெய்தாரா இல்லை என்று எனக்கு எதுவும் தெரியாது.

8. எதிரி மேற்படி நிறுவனத்தில் முதலீடுசெய்த ரூ.28,00,000 த்தை என்னிடம் திரும்ப கேட்டதற்காக அவரை மிரட்டி ம.சா.,ஆ.2 கசோலையை அவரிடம்பெற்றுசென்றேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.